தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**8 வயதுப்பிரிவு**
(01.01.2009 – 31.12.2009 வரையில் பிறந்தோர்)

## நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

சோமசுந்தரப் புலவர் ஈழம் தந்த அருந்தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். யாழ்ப்பாணத்தின் நவாலி என்னும் சிற்றூரில் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து எட்டாம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் பெயர் கதிர்காமர்; தாயார் பெயர் இலக்குமிப்பிள்ளை.

சோமசுந்தரப் புலவர் சிறுவயது முதலே பேச்சாற்றலும் விவாதத்திறமையும் ஒருங்கே பெற்றவராகத் திகழ்ந்தார். தாய்மொழியோடு ஆங்கிலத்தையும் கசடறக் கற்றறிந்தவர். தமிழ்மொழியை வளர்க்கின்ற பெரும் பணிக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்தவர்.

எளிமையும், நகைச்சுவையும், இலகுவான சொல்லாட்சியும் கொண்டமைந்த பாடல்களை எழுதித் தமிழுக்கு வளம் சேர்த்தவர். இவர் எழுதிய சிறுவர் பாடல்கள் இன்றும் இனிமை குன்றாது ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இவருடைய 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை' என்கின்ற பாடல் தமிழரின் பண்பாட்டு வாழ்வையும் ஒற்றுமையையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

தான் வாழ்ந்த சூழலுக்குள் நின்று, அதனை அப்படியே வெளிக்கொண்டு வருபவை இவரது படைப்புகள். அதனால் அவை காலம் கடந்தும் நினைவில் நிற்கும் தன்மை கொண்டனவாக விளங்குகின்றன.

ஆசிரியராகப் பணியாற்றிய போதும், அப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் தமிழுக்குத் தொண்டாற்றியவர் இவர். அந்நியரின் ஆட்சியை எதிர்க்க வேண்டும் என்ற விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தியவர்.

வாழ்கின்ற காலமெல்லாம் தமிழுக்காகத் தொண்டாற்றி "தங்கத்தாத்தா" என்ற சிறப்போடு எம் மனங்களிலே நிறைந்த சோமசுந்தரப்புலவர், தனது எழுபத்தைந்தாவது அகவையிலே இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் போற்றி வளர்த்த தமிழ்மொழியை அவரின் நினைவுகளோடு நாமும் வளர்ப்போம்.

நன்றி,

வணக்கம்.